10 .11. 2025 OS.No. 66 / 2020

**பி.வா.சா. 2 பெயர்: முருகன் த/பெ. ராமர்**

**சாட்சி ஆஜர். சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.**

**குறுக்கு விசாரணை:**

வாதிகளை தெரியும். 4ம் பிரதிவாதி யார் என்றால் தெரியாது. இந்த வழக்கில் நான் எதிர் வழ்க்குரை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். வெண்ணாம்பட்டியில் வீட்டுமனை பட்டா எப்போது வழங்கினார்கள் என்றால் தெரியாது எத்தனை பேருக்கு கொடுத்தார்கள் என்றால் 42 பேருக்கு பட்டா கொடுத்தார்கள் அதில் மாதப்பன் த/பெ திம்மனுக்குபட்டா கொடுத்தார்களா என்றால் சரிதான். அதில் அவர் வீடு கட்டியுள்ளார் எப்போது வீடு கட்டினார் என்றால் பட்டா கொடுத்ததும் வீடு கட்டி 30 வருடம் ஆகிறது. மின் இணைப்பும் பெற்றுள்ளார். அவர் எப்போது மின் இணைப்பு பெற்றார், மின் இணைப்பு எண் போன்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. யாருடைய நிலத்தை எடுத்து அரசு பட்டா கொடுத்தது என்றால் வாதி துரைசாமி மற்றும் ஜெயராமன் ஆகியோர் நிலம் எடுத்து பட்டா கொடுத்தார்கள் அப்போது நிலம் அளந்தார்கள் . மேற்படி பட்டா கொடுப்பதற்கு எடுக்கப்பட்ட நிலத்திற்கு தெற்கு பக்கம் வாதிகள் நிலம் உள்ளது. மேற்படி வாதி நிலத்திற்கும் வீட்டுமனை கொடுப்பதற்கு எடுக்கப்பட்ட நிலத்திற்கும் நடுவில் ரோடு செல்கிறது என்றால் சரிதான். மேற்படி ரோடு எவ்வளவு சென்ட் எவ்வளவு நீளம் மற்றும் அகலம் என்பது தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி ரோடு உள்ள சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. வாதி தாக்கல் செய்துள்ள வழக்கின் சர்வே எண் விஸ்தீரனம் மற்றும் சக்குபந்தி தெரியுமா என்றால் தெரியாது. ரோட்டிற்கு தெற்கு உள்ள வாதிகள் நிலத்தில் எங்களுக்கு எந்த வித உரிமை அனுபவமும் இல்லை என்றால் சரிதான். மேற்படி ரோட்டிற்கு தெற்கே உள்ள நிலத்தில் வாதிகள் கட்டிடம் கட்டி அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். மேற்படி வாதிகள் அவர்களுக்கு சொந்தமான மற்றும் அனுபவம் செய்து வரும், இடத்தில் பிரதிவாதிகளுக்கு எவ்வித அனுபமும் உரிமையும் இல்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் விவரம் எனக்கு தெரியாது. கோயில் எந்த சர்வே எண்ணில் உள்ளது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பட்டா எண் 100 ஆகும். சர்வே எண் தெரியாது. மேற்படி பட்டா எண் 100 சொத்திற்கு 4 பக்கமும் ஜெயராமன் நிலம் உள்ளது. மேற்படி பட்டா எண் 100 யார் பெயரில் உள்ளது என்றால் கோவிந்தன் அவரது மனைவி ஜெயா, கெண்டச்சி அவரது மகள் பெயர் ஜெயா, கண்ணன் மனைவி ஆகியோர் பெயரில் உள்ளது. பட்டா எண் 100 ல் ஜெயராமன் மற்றும் துரைசாமி உள்ளதாக என்றால் இல்லை. கோவில் பட்டா எண் 100 ல் உள்ளது. நான் குறிப்பிடுவது போல் பட்டா எண் 100 ல் கோவில் இல்லை என்றால்

வழக்கிற்காக பொய்யாக கூறிகிறேன் என்றால் சரியல்ல. வாதிகள் புறம்போக்கு நிலம் அனுபவம் செய்து வந்து தென்னை மரம் மற்றும் நெல் ஆகியவற்றை எப்போது அகற்றி பாதை அமைத்தார்கள் என்றால் உயர் நீதிமன்ற உத்தரவு படி அகற்றி சுமார் 20 வருடம் இருக்கும். நாங்கள் கோவில் கட்டினோம் என்பதற்காகவும் சிலை வைத்தோம் என்பதற்காகவும் ஆவணம் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. வாதிகள் பட்டா எண் 100 க்கு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பழைய சர்வே எண் 4/3 புது உட்பிரிவு 4/3இ2 ல் 46.50 வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றாலும் அவர்கள் நிலத்தில் கோவில் கட்டி அதில் வாதிகள் பூஜைகள் செய்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் ஊர்பொதுமக்கள் சிறிய கோவிலை பெரிய கோவிலாக கட்டி அனுபவம் செய்து வருகிறோம். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலம் மற்றும் 4ம் பிரதிவாதி எனக்காவும் சேர்த்து தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையிலும் தாவா சொத்தில் உள்ள கோவிலை நாங்கள் கட்டியதாகவோ பூஜை செய்து வருவதாகவோ குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண் 4/3 டி-ல் மாரியம்மன் கோவில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி மாரியம்மன் கோவில் கட்டியதாகவோ மேற்படி சர்வே எண்ணில் கோவில் உள்ளதாகவோ எந்தவிதமான ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 08.02.2020 ம் தேதியில் வாதிகள் அவர்கள் நிலத்தை அனுபவம் செய்தும் கோவிலை பூஜை செய்து வந்தபோதும் பிரதிவாதிகளாகிய நாங்கள் சென்று அவர்களுக்கு இடையூறு செய்ததால் வாதிகள் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் வழக்கு படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

THIRUGNANASAMBANDAM P

Subordinate Judge, Uthangarai.
Digitally signed by THIRUGNANASAMBANDAM P

சார்பு நீதிபதி,

ஊத்தங்கரை.